1990 ஏப்ரல் 26]

மருத்துவ வசதிக்காக கீழே இறங்குகின்ற போது அந்த செக் போஸ்ட்டிலே ஆட்கள் இல்லாத காரணத்தினாலே சில சங்கடங்கள் வருவதாகச் சொன்னார்கள். அதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது போல நம்முடைய அண்ண மலை அவர்கள் எழுப்பிய பிரச்சனையிலும் தனிப்பட்ட வர்களுக்குச் சொந்தமான நிலத்திலே பச்சை மரத்தையே வெட்டுகின்ற அளவிற்கு வனத்துறை அதிகாரிகள் ஈடுபட்டார்கள் என்றால் அது மாபெரும் குற்றம். அதைத் தடுப்பதற்கு வனத்துறை நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

கடைகள் கட்டுதல்

*2600 திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை பெரிய கடை வீதியில், கோனியம்மன் கோவிலுக்கு எதிரில் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இதன் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உலக வங்கி உதவியுடன் கோவை மாநகராட்சியில் பெரிய கடை வீதியில் கோனியம்மன் கோவிலுக்கு எதிரில் (குரு ஓட்டல் அருகாமையில்) ''வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் கடைகள்'' கட்ட ரூ. 75 இலட்சம் கோவை மாநகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 30-9-1989-ல் அரசு நிதியுதவி செய்துள்ளது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பெரியகடை வீதியில் கோனியம்மன் கோவிலுக்கு எதிரிலே ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டும் திட்டப் பணி எப்போது முடிவு அடையும், சுமார் எவ்வளவு கடைகள் கட்டப்பட இருக்கின்றன, பலமாடி கட்டிடங்களாக கட்டப்பட இருக்கிறதா என்பதையும், இதன் மூலம் மாநகராட்சிக்கு ஆண்டு வருமானம் சுமார் எவ்வளவு கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, 16,472 சதுர அடி இடத்தில் இந்தக் கடை கட்டப்பட இருக்கிறது. முதல் தளத்தில் 93 அறைகள் அதிலே கட்டப்பட இருக்கின்றன. அதற்கு கீழ் வாகனங்கள் நிறுத்துவதற்கும் வசதி செய்யப்படவுள்ளது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உலக வங்கியினுடைய உதவியோடு சுமார் 75 இலட்சம் மதிப்பீட்டில் இந்தப் பணி தொடங்கும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் கோவை மாநகரில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக நடைபாதைகளிலும் பிரதான சாலை ஓரங்களிலும் சிறு கடைகள் வைத்து பிழைத்து வரக்கூடிய இந்த சிறு கடைக்காரர்களுக்கு கார் ஸ்டாண்டோடு, மற்ற பெரிய காம்ப்ளெக்ஸோடு ஒரு சிறு பகுதியை ஒதுக்கி, சிறு கடைக்காரர்களிடத்திலே குறைந்தபட்ச வாடகையை வசூலிக்கக்கூடிய முறையிலே ஒரு ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்ய முன்வருவார்களா? அதுபற்றிய செயற் குறிப்பை பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தனியான இடத்தை ஒதுக்கி அதைச் செய்வார்களா என்று கேட்டார். அதுபற்றி மட்டும் தற்சமயம் நான் பதில் சொல்வதற்கில்லை. ஆனால் நான் ஏற்கனவே அறிவித்த திட்டத்தை ஒட்டி வேறு பல—இன்னும் சரியான வளர்ச்சியை நகரம் பெறுவதற்குத் தகுதியான பல—வளர்ச்சித் திட்டங்களைச் சேர்த்து 400 இலட்சத்திற்கான மதிப்பீடுகள் கோவை மாநகராட்சி ஆணையாளரால் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் 210 இலட்சம் உலக வங்கியிடமிருந்தும், மீதி 90 இலட்சம் மாநகராட்சி நிதியிலிருந்தும் திரட்டப்பட உள்ளன. நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு நிதியிலிருந்து இதற்கு வழிவகை செய்வதற்கான கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து அனுப்பப் பட்டுள்ளது.

இடையக்கோட்டை அணைக்கட்டு கட்டும் திட்டம்

*1526 திரு. பி. காளியப்பன்,
திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், பழனி வட்டம் இடையக்கோட்டை அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.